# சென்னை

# மெட்ரோ நிலையங்களில் இலவச நாப்கின்!

## அமைச்சர் தொடங்கி வைத்தார்!!

சென்னை, பிப். 24

சென்னை மெட்ரோ ரெயில்நிலையங்களில்இலவசமானநாப்கின் வழங்கும் திட்டத்தை அமைச்சர் எம். சி.சம்பத்துவங்கிவைத்தார். மேலும்இரண்டாம் கட்டத்தின் திட்ட பணிகள் ஜூன் மாதத்தில் தொடங்கும் என்றுமெட்ரோரெயில்அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்துறை அமைச்சர் எம்.சி.சம்பத்சென்னையில் உள்ள 39 மெட்ரோ நிலையங்களிலும் பெண் பயணிகளுக்கு இலவச நாப்கின்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார்.அவசர காலதேவைக்காகபெண்பயணிகளுக்குநாப்கின்கள் உடனடியாககிடைக்கஇந்ததிட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மெட்ரோ ரெயில் நிலையத்திலும் 100 எண்ணிக்கை வரை சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ இரண்டாம் கட்ட பணி தொடங்கப்படுவது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (சிஎம்ஆர்எல்)நிர்வாகஇயக்குநர்பிரதீப் யாதவ் கூறியதாவது:

118.9 கி.மீ வேகத்தில் இயங்கும் சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தின் கட்டுமானம் ஜூன் மாதத்தில் தொடங்கும், சில ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு வருகிறது.சுரங்கப்பாதைகட்டுமானத்திற்கான வேலை சுமார் நான்குஅல்லது ஐந்து மாதங்களில்முழுமையாகதொடங்கப்பட்டுவிடும். பணிகளை கவனிக்கதிட்டமேலாண்மை தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறுஅவர்கூறினார்.